## சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சி நிர்வாகம் – பொறியியல் பிரிவு – பொறியியல் பிரிவில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்களை நிரப்ப அனுமதி – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 1) துறை**

அரசாணை (நிலை) எண். 126 நாள்: 05.09.2007

17035

**மீண்டும் படிக்கவும்:**

அரசாணை (நிலை) எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.5.1998.

**மேலும் படிக்கவும்:**

2. சிறப்பு சிற்றூராட்சி இயக்குநர் (தற்போது பேரூராட்சி இயக்குநர்) கடிதம் ந.க.எண்.19346/2005 அ2, நாள்.2.12.2005
3. பேரூராட்சிகளின் இயக்குநர் கடித எண்.3850/07 அ1 நாள். 1.8.2007.

**ஆணை:**

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சி இயக்கத்தில் கீழ்க்கண்டவாறு பொறியியல் பணியிடங்கள் ஏற்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | செயற்பொறியாளர் (ரூ.10000–325–15200) | 1 |
| 2. | உதவி செயற்பொறியாளர் (ரூ.8000–275–13500)<br>மண்டலம் 16<br>சிறப்பு பிரிவு 5<br>------<br>மொத்தம் 21<br>--------<br>(15 பணியிடங்கள் ஏற்கனவே உள்ளன) | 21 |
| 3. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (ரூ.6500–200–11100)<br>மண்டலம் 90<br>சிறப்பு பிரிவு 35<br>------<br>மொத்தம் 125<br>-------<br>(67 பணியிடங்கள் ஏற்கனவே உள்ளன) | 125 |

| | | |
|---|---|---|
| 4. | வரைவாளர் (ரூ.4500–125–7000)<br>செயற்பொறியாளர் அலுவலகம் 2<br>மண்டல உதவி செயற்பொறியாளர் அலுவலகம் 16<br>சிறப்பு பிரிவு உதவி செயற்பொறியாளர் அலுவலகம் 5<br>மொத்தம் 23 | 23 |
| 5. | பணி ஆய்வாளர் (ரூ.3050–75–3950–80–4590)<br>மண்டலம் 180<br>சிறப்பு பிரிவு 70<br>மொத்தம் 250 | 250 |

2. இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் பேரூராட்சி இயக்குநர் தனது செயற்குறிப்பில் முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.93, நாள்.28.5.1998–ல் ஏற்படுத்தப்பட்ட பொறியியல் பிரிவு பணியிடங்கள் பேரூராட்சிகள் துறை வகைப்படுத்தப்பட்ட பின்னர் கீழ்க்கண்டவாறு அங்கீகரிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

| அரசாணை எண்.93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 2) துறை நாள்.28.5.1998 | | | அரசாணை (நிலை) எண்.150, ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள். 1.10.2004–ன்படி நிரப்பப்பட்டவை | இதுவரை நிரப்பப்படாத இதர பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| வ. எண். | பதவி | எண்ணிக்கை | | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | செயற் பொறியாளர் | 1 | 1 | —— |
| 2. | உதவி செயற் பொறியாளர் | மண்டலம் – 16<br>சிறப்பு பிரிவு – 5 | 16 | ——<br>5 |
| 3. | உதவி பொறியாளர்/ இளநிலை பொறியாளர் | மண்டலம் – 90<br>சிறப்பு பிரிவு – 35 | 81 | 9<br>35 |
| 4. | வரைவாளர் | தலைமை அலுவலகம் – 2<br>மண்டலம் –16<br>சிறப்பு பிரிவு – 5 | | 2<br>16<br>5 |
| 5. | பணி ஆய்வாளர் | மண்டலம் – 180<br>சிறப்பு பிரிவு –70 | | 180<br>70 |

3. பேரூராட்சிகள் நிர்வாகத்தின் கீழ் உள்ள 561 பேரூராட்சிகளும் அரசாணை (நிலை) எண்.150, ஊரக வளர்ச்சித் (சி1) துறை, நாள்.1.10.2004-ன் படி ஒதுக்கீடு செய்யப்பட்ட 81 உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் தலைமை இடங்களைக் கொண்டு (ஒவ்வொரு தலைமை இடத்திற்கும் தலா 7 பேரூராட்சிகள் மற்றும் அதற்கு கீழும்) இயங்கி வருகின்றன.

4. தற்போது பேரூராட்சி துறையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் ஒரு பேரூராட்சியிலேயே ரூ.2.00 கோடிக்கு பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போதுள்ள அலகின்படி 7 பேரூராட்சிகளில் உள்ள பல கோடிக்கும் அதிகமான வளர்ச்சிப் பணிகளை ஒரே உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் கவனித்து வருவது வேலை தாமதம் / தரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளையும், சிக்கல்களையும் ஏற்படுத்துவதாக அமைகிறது. எனவே, பேரூராட்சிகளின் துறைக்கு தற்போது 16 உதவி செயற்பொறியாளர்கள் 81 உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் பணியிடங்கள் போதுமானதாக இல்லையென்பதால் கூடுதலாக உதவி செயற்பொறியாளர் / உதவிப் பொறியாளர்/ இளநிலை பொறியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

5. மேற்காணும் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் மாநில நிதி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பேரூராட்சிகளுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் ஒப்படைப்பு நிதியிலிருந்தே (Devolution of Funds) வழங்கப்படுகின்றன.

6. எனவே, மேலே தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் பேரூராட்சிகள் துறைக்கு அவசரம் மற்றும் அவசியத்தை கருதி அரசாணை எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.5.1998-ன்படி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இதுவரை பல்வேறு நிர்வாகக் காரணங்களால் நிரப்பப்படாமல் உள்ள கீழ்க்காணும் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசின் அங்கீகாரத்தினை அளிக்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ.எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவி செயற் பொறியாளர் | 5 |
| 2. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 35 |
| 3. | வரைவாளர் | 23 |
| 4. | பணி ஆய்வாளர் | 250 |
| | மொத்தம் | 313 |

7. மேற்கண்ட பேரூராட்சிகளின் இயக்குநரது கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அரசாணை (நிலை) எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.5.1998 -ல் அங்கீகரிக்கப்பட்டு ஏற்கனவே நிரப்பப்பட்டது போக நிரப்பப்படாமல் உள்ள கீழ்க்காணும் பணியிடங்களை புத்தாக்கம் செய்து (revive), அவற்றை நிரப்புவதற்கு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது:-

| வ.எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவி செயற் பொறியாளர் | 5 |
| 2. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 35 |
| 3. | வரைவாளர் | 23 |
| 4. | பணி ஆய்வாளர் | 250 |
| | மொத்தம் | 313 |

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.124/SS(PK)-2007, நாள் 29.08.2007 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு செயலாளர்

பெறுநர்

பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை 600 108.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்
மாநில கணக்காயர், சென்னை 600 018/600 035.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை அலுவலகம்,
சென்னை 600 108.

நகல்

மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
அரசு செயலரின் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பொது, வரவு செலவு, பேரு 2, நப 3 மற்றும் நபு 1) துறை,
சென்னை 600 009.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

5/9/07

பிரிவு அலுவலர்.

5/9/07